**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 167/2017**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 5 |
| Name (திரு/திருமதி) | : ஞானசேகர் |
| Father's Name/ Husband's Name | : சுப்பிரமணியன் |
| Village & Taluk | : வேலூர் |
| Calling | : ஆய்வாளர் |
| Age | : 60 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.04.2026**

2ம் எதிரி ஆஜர். 1ம் எதிரி இறந்துவிட்டார்.

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது வளத்தி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் காவல் ஆய்வாளர் திரு. பழனி ஆகியோர்களின் பணிமாறுதல் பெற்று சென்றுவிட்டதாகவும் அவர்களின் கையொப்பமும் எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 27.03.2017 மாலை 16.30 மணியளவில் வளத்தி கா.நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக திரு.குமார் என்பவர் பணியில் இருந்த போது அ.சா.1 குமார் என்பவர் எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துக்களுடன் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.76/2017 இதச பிரிவுகள் 392, 506(i)-ன் கீழ் மு.த.அ பதிவு செய்துள்ளார். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ-9-ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்பு அவர் அன்றைய தினமே மாலை 18.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் கோபிநாத், ஏழுமலை ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அசாஆ 10 மற்றும் 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. பின்பு எதிரியுடன் ஆஜர் செய்த பணம் ரூ.400/-, கருப்பு நிற Lava செல்போன் ஒன்று, வெளிர்நீலம் மற்றும் வெள்ளை நிறம் கொண்ட City செல்போன் மற்றும் TN 25 AS 2340 என்ற நீலம் கருப்பு நிற Hero HF Delux இரு சக்கர வாகனம் ஆகியவற்றை மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் ஒப்படைத்ததை சாட்சிகள் கிராம நிர்வாக அலுவலர் கோபிநாத், கிராம உதவி ஆய்வாளர் திரு.

ஏழுமலை ஆகியோர்கள் முன்னிலையில் காவல் நிலைத்தில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார், **மேற்படி கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.12–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பின்பு எதிரி மேற்படி சாட்சிகள் முன்னிலையில் எதிரி வெங்கடேசன் என்பவர் தாமாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் *" 27.03.2017 அன்று காலை …… ஒத்தவாடை தெருவில் பிராந்தி கடை முன்பு சாவியுடன் இருந்த TN 25 AS2340 Hero HF Delux இரு சக்கர வாகனத்தை …… எடுத்துக்கொண்டேன் …… பாலாஜி …… என்னுடன் ஏறிக்கொண்டான் …… மாலை 04.00 மணியளவில் சிறுதலைப்பூண்டி நோக்கி வரும்போது அக்னிகுளம் கரையின் ஓரம் எங்களுக்கு எதிரில் நடந்து வந்தவர் முன்பு …… பிரேக் போட்டு …… அவர் ரூ.200/–யை …… கொண்டேன் என் பின்னால் உட்காரந்து வந்த பாலாஜி நடந்து வந்த ஒருவரின் …… இருந்த ரூ.200/–யை எடுத்துக்கொண்டார். இருவரும் சேர்ந்து பிடிக்க முயன்றபோது சிறுதலைப்பூண்டி பக்கம் போனோம் …… போலிஸ் என்று தெரியாது. அவர்கள் ஒயர்லஸ் மூலம் தகவல் சொல்லி சிறுதலைப்பூண்டி ரோட்டில் மடக்கி பிடித்துவிட்டார்கள் அவர்கள் அனைவரும் சேர்ந்து …… எங்களை வளத்தி காவல் நிலையம் கொண்டு வந்து ஆஜர் செய்தனர் …… பணம் ரூ.400/–யை …… எடுத்து ஆஜர் செய்தேன் ஏற்கனவே …… பயன்படுத்தி வந்த இரண்டு செல்போன்களையும் ஆஜர் செய்தேன் ………… மோட்டார் சைக்கிள் காவல் நிலையம் முன்பு உள்ளது"* என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் **மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. பின்பு எதிரிகளிடம் இருந்து கைப்பற்றிய பணம் ரூ.400/–, கருப்பு நிற Lava செல்போன் ஒன்று, வெளிர்நீலம் மற்றும் வெள்ளை நிறம் கொண்ட City செல்போன் மற்றும் TN 25 AS 2340 என்ற நீலம் கருப்பு நிற Hero HF Delux இரு சக்கர வாகனம் ஆகியவற்றை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து **வழக்கு சொத்து எண்.61/2017 பெற்றுள்ளார். மேற்படி படிவம் 91 அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி **கருப்பு நிற Lava செல்போன் ஒன்று, வெளிர்நீலம் மற்றும் வெள்ளை நிறம் கொண்ட City செல்போன் மற்றும் TN 25 AS 2340 என்ற நீலம் கருப்பு நிற Hero HF Delux இரு சக்கர வாகனம் ஆகியவைகள் முறையே அ.சா.பொ.2 முதல் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. பின்பு அவரது விசாரணையில் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இருந்தும் சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்தும் இவ்வழக்கின் எதிரிகள் தங்களை போலிசார் என்று பொய் சொல்லி பணம் பறித்து கொலை மிரட்டல் விடுத்ததாக தெரிய வந்ததாலும் இவ்வழக்கின்

சட்டப்பிரிவுகளான 392, 506(1) இதச என்பவரை 392, 117, 506(1) இதச என பிரிவு மாற்றம் செய்துள்ளார். **மேற்படி சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்பு அவரது விசாரணை முடித்து எதிரகிள் மீது இதச பிரிவுகள் 392, 117, 506(1) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி அல்ல என்றால் சரிதான்.

நான் இவ்வழக்கில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சம்பவ இடம் மேல்மலையனூர் அக்னி குளம், குளக்கரை ஆகும். சம்பவம் நடந்த தேதி அம்மாவாசை என்றாலும் அன்றைய தினம் ஊஞ்சல் திருவிழா நடைபெறுவது வழக்கம் என்றால் நள்ளிரவில் நடக்கும். அன்றைய தினம் தரிசனத்திற்காக பொதுமக்கள் சுமார் 2000 ற்கும் மேற்பட்டோர்கள் குழுவி இருந்தனர் என்றால் சரிதான். அ.சா.6 இவ்வழக்கின் பாதிக்கப்பட்ட சாட்சி என்றால் சரிதான். மேற்படி அ.சா.6 அவரது பணம் திருடுபோனது தொடர்பாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான்.

2. இவ்வழக்கின் புகார்தாரர் காவலர் என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட இரு சக்கர வாகனத்தின் பதிவு சான்றை கைப்பற்றி புலன் விசாரணை அதிகாரி இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. எதிரிகளிடம் இரு'ந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் இரு சக்கர வாகனம் யாருக்கு சொந்தமான என்பதை விசாரித்து அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3. 1ம் எதிரி கிராம நிர்வாக அலுவலரான அ.சா.7 ன் முன்பு ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார் மேற்படி அ.சா.7 எந்த கிராமத்தின் நிர்வாக அலுவலர் என்றால் அப்போது அவர் வளத்தி கிராமத்தின் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்துள்ளார். அவருடன் வந்த கிராம உதவியாளர் எந்த கிராமத்தின் உதவியாளர் என்றால் வடவெட்டி கிராமத்தின் உதவியாளர் ஆவார். வளத்தி கிராமத்திற்கு என்று உதவியாளர் உள்ளார் என்றால் எப்போதும் அவ்வாறு ஒவ்வொரு கிராமததிற்கும் ஒரு கிராம உதவியாளர் இருப்பது வழக்கம். வளத்தி கிராம உதவியாளரை சாட்சியாக சேர்க்காமல் வடவெட்டி கிராமத்தின் உதவியாளரை சாட்சியாக சேர்த்தற்காக காரணம் என்னவென்றால் வட்டாச்சியர் அலுவலகத்தில் இருந்து அனுப்பி இருப்பார்கள். மேற்படி சங்கதி இறுதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

4. மேற்படி அ.சா.7 மற்றும் அ.சா.8 ஆகியோர்கள் காவல் நிலையத்திற்கு வருவதற்கு முன்னதாகவே எதிரிகள் மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் காவல் நிலையத்தில் ஆஜர்படுத்தப்பட்டது என்றால் அது குறித்த விவரங்கள்

வழக்கு கோப்பில் இல்லை. அ.சா.6 யை தவிர மற்ற அனைத்து சாட்சிகளும் காவலர்கள் என்றால் சரியல்ல, அ.சா.1 முதல் அ.சா.4 வரையானவர்கள் காவலர்கள் ஆவார்கள்.

5. அ.சா.1 சம்பவத்தன்று பணியில் இருந்ததற்கான ஆவணங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அ.சா.1 கொடுத்த பொய் புகாரை புலன் விசாரணை அதிகாரி சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும், 1ம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றாலும், அதன் அடிப்படையில் எந்த சொத்துக்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், நான் புலன் விசாரணை அதிகாரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.